Registered as a Newspaper பக்கங்கள் 04 விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2025 தை 28 (10-02-94) வியாழக்கிழமை ஓசை 357

## சிறிலங்காவின் தேசிய உற்பத்தி 29 சதவீதமாக வீழ்ச்சி

இலங்கையின் மொத்தத் தேசிய உற்பத்தி பெருமளவில் வீழ்ச்சி கண்டுள்ளது. 1988 ஆம் ஆண்டில் 35 வீதமாக இருந்த உற்பத்தி அளவு 29 வீதமாகக் குறைந்துள்ளது. இவ்வாறு கிறிஸ்ரியன் வேக்கர் என்ற ஆங்கிலச் சஞ்சிகை கருத்து வெளியிட்டுள்ளது. மேலும் அப்பத்திரிகை, 1990 ஆம் ஆண்டு தொடக்கம் 1993 ஆம் ஆண்டு வரை சிறிலங்கா போருக்கென 8,422 கோடி செலவு செய்துள்ளது. இக்காலத்தில் போருக்கு ஒதுக்கப்பட்ட பணம் 6,530 கோடி ரூபாவாகும். ஆனால், மேலதிகமாக 1892 கோடி ரூபா யுத்தத்திற்கு செலவு செய்யப்பட்டுள்ளது. சிறிலங்காவின் மொத்தத் தேசிய உற்பத்தியில் 12 வீதம் போருக்குச் செலவிடப்படுகின்றது.

# வடக்கிற்கு உணவு அனுப்பாவிட்டால் தமிழர் மண்ணையே தின்னவேண்டும்

## டி. பி. விஜேதுங்காவின் பேரினவாதக் கர்ச்சனை

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் ஈழம் கோருகின்றனர் என்றுமே அவர்களுக்கு ஈழம் கிடைக்காது வடக்கு கிழக்குக்கு ஈழம் தரப்படும் எனக் கூறி தெற்கிலுள்ள தமிழர்களை அங்கு செல்லுமாறு நாம் கோரினால் என்ன நடக்கும்? உண்பதற்கு அவர்களிடம் என்ன இருக்கிறது. மண்ணை மட்டும்தான் அவர்கள் தின்ன வேண்டும் அங்கு வருமானம் தரும் வளங்கள் என்ன? வடக்கு வளம் கொண்ட பூமியல்ல சகல பொருள்களும் தெற்கிலிருந்தே அனுப்ப வேண்டியுள்ளது. ஒரு நாளைக்கு உணவுப்பொருள்கள் அங்கு அனுப்பப்படாவிட்டால் அங்குள்ளவர்கள் பட்டினியால் வாட வேண்டிய ஏற்படும் என ஜனாதிபதி

(4ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளுடன் பேச்சுவார்த்தை எதிலும் அரசாங்கம் ஈடுபடவில்லை

## அமைச்சர் விமால் விக்கிரமசிங்க தெரிவிப்பு

வடக்கு - கிழக்கில் நடைபெறும் யுத்தம் தொடர்பாக அரசாங்கம் எந்தவொரு பேச்சுவார்த்தையிலும் தற்பொழுது ஈடுபட்டிருக்கவில்லை என பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் விமால் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அண்மையில் யாழ். சென்றிருந்த கத்தோலிக்க அதிமேற்றிராணியார் நிக்கிலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோவிடம் விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் சமாதானம் குறித்து எதுவித செய்தியையும் தெரிவிக்கவில்லை எனவும், சமாதானம் குறித்து அவர் பேசினால் மட்டுமே பேச்சுவார்த்தை நடத்தப்படும் எனவும் அமைச்சர் மேலும் கூறினார் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர் நிமால் சிறிபால டி சில்வா எழுப்பிய கேள்வியொன்றிற்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்

## ஹெலியிலிருந்து சூடு மீனவர் படகுகள் சேதம்

(வடமராட்சி)

சிறிலங்கா அரசிற்கு சொந்தமான உலங்கு வானூர்தி ஒன்று நேற்று பொலிகண்டிப்பகுதியில்உள்ள குடியிருப்புகள் மீது சில மணி நேரம் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டது.

பலாலிசிறிலங்கா இராணுவ முகாமில்இருந்துபிற்பகல்2-05 மணியளவில் விரைந்து வந்த உலங்கு வானூர்தி பலத்த துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்துவிட்டுச் சென்றது.

காலையில்7-30 மணியளவிலும் 10-40 மணியளவிலும் இவ் உலங்கு வானூர்தி வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, உடுப்பிட்டிப் பகுதிக் குடியிருப்புகள் கரையோரக் கடற்பகுதியையும் வட்டமிட்டு நோட்டமிட்டது.

உலங்கு வானூர்தி மேற்கொண்ட தாக்குதலையடுத்து கரையோரப்பகுதியில் கட்டிவிடப்பட்டிருந்த மீனவர்களின் படகுகள் சில சேதமடைந்தன. (யோ)

# வடக்கு-கிழக்கு தமிழர் தாயகம்; ஐ. நா. அங்கீகரிக்க வேண்டும்

## 17 அரச சார்பற்ற அமைப்புக்கள் கோரிக்கை

[ஜெனீவா]

இலங்கையின் வடக்கு - கிழக்கு பகுதிகளில் தமிழர் தாயகம் உள்ளது என்பதற்கு மதிப்புக்கொடுக்கும் வகையிலும் தமது அரசியல் அந்தஸ்தை சுதந்திரமாக நிர்ணயிக்கும் உரிமை தமிழர்களுக்கு உள்ளது என்பதை அங்கீகரிப்பதன் ஊடாகவும் இலங்கையில் அமைதியைக் கொண்டுவருவதற்கு ஐ நா. செயலாளர் நாயகம் தன்னுடைய நல்லெண்ண முயற்சிகளைப் பயன்படுத்தவேண்டும் என ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 50ஆவதுகூட்டத்தொடரில் 17அமைப்புகளால் விடுக்கப்பட்ட கூட்டறிக்கையில் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

ஜெனீவாவில் ஆரம்பமாகியுள்ள மனித உரிமைகள் ... நிறுவனங்கள் இலங்கை நிலைமை தொடர்பாக வெளி... மானம் ஒன்றில் சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் ... டும் ஆணைக்குழுவின் 49 ஆவது கூட்டத் தொடரில்

## மன்னார் வீதி பொலிஸ் காவலரண்கள் நீக்கம்

(மன்னார்)

மன்னாருக்கும் தலைமன்னாருக்கும் இடையில் உள்ள ஏழு பொலிஸ் மினி முகாம்கள் கடந்த மூன்றாம் திகதி திடீரென அகற்றப்பட்டன.

இவற்றின் பாதுகாப்பைக் கருத்திற் கொண்டே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸ் உயரதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

புலிகளின் ஊடுருவலை தடுப்பதற்கே இந்த பொலிஸ் நிலையங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

இதேசமயம் மன்னார் பகுதியில் உலங்குவானூர்திகளின் நடமாட்டமும் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## வீரச்சாவு



இவற்றின் பாதுகாப்பைக் கருத்திற் கொண்டே இந் நடவடிக்கை மேற் கொள்ளப் பட்டதாக பொலிஸ் உயரதி

இத்தேசமயம் மன்னார் பகுதியில் உலங்குவானூர்திகளின் நடமாட்டமும் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## மிதிவெடியில் சிக்கி மீனவர் காயம்

(குருநகர்)

பூநகரி-கல்முனை பந்தலடி என்னும் பகுதியில் நேற்று கடற்றொழிலுக்குச் சென்ற மீனவர் ஒருவர் மிதி வெடியில் சிக்கி காயமடைந்த நிலையில் நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

குருநகர் தண்ணீர் தாங்கி வீதியைச் சேர்ந்த காணிக்கை ஜஸ்ரின் (வயது 40) என்னும் திருமணமாகாத மீனவர் கல்முனை-பந்தலடிப் பகுதியில் காணப்பட்ட ஒரு பொருளை தடியினால் தட்டிப்பார்த்த பொழுது அது வெடித்ததனால் காயமடைந்த நிலையில் சக தொழிலாளர்களால் கொண்டுவரப்பட்டு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டதாகத் தெரியவருகின்றது. (21)

## கொழும்பு மத்தியில் பிரேமாவின் மகன் போட்டி

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவின் புதல்வர் சஜித் பிரேமதாசாவை ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பில் கொழும்பு மத்திய தொகுதிக்கு போட்டியிடுமாறு ஐ. தே. கட்சியின் செயலாளர் நாயகம் சிறிசேன கூரே அழைப்பு விடுத்துள்ளார் எனத் தெரிய வருகின்றது.

இது பற்றி சிறிசேனகூரே கூறுகையில் முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவின் தொகுதியான கொழும்பு மத்தியதொகுதியில்போட்டியிட வருவாரானால் தன்னுடைய முழு ஒத்துழைப்பையும் வழங்குவார் எனவும் அதற்கு முன்பு தனிப்பட்ட முறையில் பல தடவைகள் அழைப்பு விடுத்ததாகவும் ஆனால் இது பற்றி எது விதமான பதிலும் சஜித்திடமிருந்து கிடைக்கவில்லை எனவும் தெரிவித்தார்.

சஜித் பிரேமதாசா எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் அம்பாந்தோட்டைத் தொகுதியில் போட்டியிடுவதற்கு விண்ணப்பித்த போது

(4ஆம் பக்கம் பார்க்க)

### புலிகளின் பெயரைப் பாவித்து

## ஐ. தே. க. வேட்பாளர் மீது தமிழ் குழுக்கள் மிரட்டல்

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் ஐ. தே. க தமிழ் வேட்பாளர்களுக்கு தமிழ்க் குழுக்களால் கொலை மிரட்டல் விடுக்கப்படுவதாக சிறிலங்கா பொலிசார் கூறுகின்றனர்.

கடிதம் மூலம் அனுப்பப்படும் இக் கொலை மிரட்டல்களில் விடுதலைப்புலிகளின் பெயர் பாவிக்கப்பட்டுள்ள போதிலும் இவை புளொட், ரெலோ, ஈ. பி. ஆர். எல். எவ்., ஈரோஸ் அமைப்பினராலேயே அனுப்பிவைக்கப்படுவதாக பொலிசாருக்கு தகவல் கிடைத்துள்ளதாம்.

இம் மிரட்டல்களை அடுத்து தமிழ்க் குழுக்களின் நடவடிக்கைகள் மீது தீவிரகவனம்

(4ஆம் பக்கம் பார்க்க)

கள் ஆணைக்குழுவின் 50 ஆவதுகூட்டத்தொடரில் 17 அமைப்புகளால் விடுக்கப்பட்ட கூட்டறிக்கையில் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

ஜெனீவாவில் ஆரம்பமாகியுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இந்தக் கூட்டத் தொடரில் சுய நிர்ணய உரிமை தொடர்பாக ஆராயப்படுகின்றது. சர்வதேச ரீதியாக இயங்கும் 17 அரசசார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் இலங்கை நிலைமை தொடர்பாக வெளியிட்ட கூட்டறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

1987 மார்ச்சில் இலங்கை தொடர்பாக இந்த ஆணைக்குழு நிறைவேற்றிய தீர்மானம் ஒன்றில் சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் சர்வதேச ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட மனிதாபிமான சட்டங்களை ஏற்றுக் கொள்ள வேண்டும் எனக் கோரியது.

1993 பெப்ரவரியில் மீண்டும் ஆணைக்குழுவின் 49 ஆவது கூட்டத் தொடரில் 15 அரசசார்பற்ற நிறுவனங்கள் தமிழர்கள் தமது அரசியல் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் அந்தஸ்து உள்ளவர்கள் என்பது அங்கீகரிக்கப்படவேண்டும் என அவசர வேண்டுகோள் விடுத்தன. ஆனால் இன்று ஒரு வருடத்திற்கு பின்னரும் தமிழர் தாயகம் மீதான பொருளாதாரத் தடை தொடர்கின்றது. அத்துடன் தமிழர்கள் மீதான ஒடுக்குமுறையும்

(4ஆம் பக்கம் பார்க்க)

## சூரியகந்த மனிதப் புதைகுழி விவகாரம் 30 இராணுவத்தினர் மீது விசாரணை

சூரியகந்த பகுதியில் கண்டு பிடிக்கப்பட்ட மனித எலும்புக் கூடுகள் தொடர்பாக இரகசிய பொலிசார் 30இற்கு மேற்பட்ட இராணுவத்தினரின் வாக்குமூலத்தைப் பதிவு செய்வது தொடர்பான ஆரம்ப நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளதாக இரகசிய பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

காலாட் படை மற்றும் கனரக ஆயுத அணியை சேர்ந்த இவர்கள் தொடர்பான முழுமையான தகவல்கள் விரைவில் பெற்றுக்கொள்ளப்படும் என்றும் இதற்காக இராணுவ உயர் அதிகாரிகளின் ஒத்துழைப்பு பெற்றுக்கொள்ளப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## வாதுவ பயணிகள் கவனத்திற்கு

வாதுவகப்பலில்பிரயாணம் செய்வதற்கு பெயர் பதிந்தவர்களை நாளை வெள்ளிக்கிழமை 'நரோமா கப்பல்' மூலம் காங்கேசன் துறையில் இருந்து திருகோணமலைக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவர்களை நாளை மாலை 12 00 மணிக்கு பருத்தித்துறைதுறைமுகத்துக்கு சமுகம் கொடுக்கும்படி அரச அதிபர் கேட்டுள்ளார். இவ் ஒழுங்கில் ஏதாவது மாற்றம் இருக்குமெனில் அதுபற்றி அறிவிக்கப்படும் எனவும் அரச அதிபர் கூறியுள்ளார்.

### பல்கலைக்கழக மாணவர் அனுமதி

## வெற்றிடம் நிரப்புவதில் அதிகாரிகள் அசிரத்தை

(நமது நிருபர்)

யாழ். பல்கலைக்கழக 92/93 கல்வி ஆண்டிற்கு ஏற்பட்டுள்ள வெற்றிடங்களை நிரப்புவதில் மேலும் காலதாமதம் ஏற்படும் என நம்பத்தகுந்த வட்டாரங்களில் இருந்து தெரியவந்துள்ளது.

மேற்படி கல்வி ஆண்டிற்கு தெரிவானவர்களில் பலர் இன்னும் தமது பெயர்களை பதிவு செய்யாதிருப்பது தெரிந்ததே. இவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கான முயற்சிகளை யாழ். பல்கலைக் கழகம் மேற்கொண்டபோதிலும் அரச அதிகாரிகள் இவ் வெற்றிடங்களை மீள நிரப்புவதில் அக்கறை செலுத்தாது இழுத்தடிப்பதாக வருத்தம் தெரிவிக்கப்படுகிறது. யாழ். பல்கலைக்கழகத்தில் பௌதிக விஞ்ஞான துறைக்கு 200 வெற்றிடங்கள் இருந்தபோதிலும் மானிய ஆணைக்குழு 50பேரை மட்டுமே அனுமதித்திருந்தது. இவ்வாறு தெரிவான 50 பேரில் பத்துப்பேர் மட்டுமே தமது பெயர்களைப் பதிவுசெய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இதேபோன்றே உயிரியல் விஞ்ஞானம் மற்றும் மருத்துவபீடத்திற்கும் வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் இருப்பதாகவும் இவற்றிற்கு தெரிவானவர்களில் சிலர் தென்பகுதி பல்கலைக்கழகங்களுக்கு இடமாற்றம் கோரி கொழும்பில் தங்கிநிற்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இவர்களால் ஏற்பட்டுள்ள வெற்றிடங்களை நிரப்புவதி

(4ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலை. வெட்டுப்புள்ளி வெளிவருவதுதாமதமாகும்

(நமது நிருபர்)

93/94 பல்கலைக்கழக கல்வி ஆண்டிற்கான வெட்டுப்புள்ளி வெளிவருவதில் மேலும் தாமதம் ஏற்படும் என கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

மேற்படி கல்வி ஆண்டிற்கான வெட்டுப்புள்ளி கடந்த ஜனவரியில் வெளியாகும் என முன்னர் செய்தி வெளியானது தெரிந்தது.



2-ம் லெப். ஜெயசீலன்

ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து நேற்று முன்தினம் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலினால் விடுதலைப்புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார். வீரச்சாவடைந்த 2-ம் லெ

(4ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலை. துணைவேந்தர் மார்ச்வரைபதவிவகிப்பார்

(நமது நிருபர்)

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தரின் இராஜினாமாக் கடிதத்தை சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா ஏற்றுள்ளதாக யாழ். பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும் இப் பதவியில் துணைவேந்தர் மார்ச் 31 வரை தொடர்ந்தும் இருப்பார் எனவும் ஏப்ரல் முதலாம் திகதி முதல் புதிய துணைவேந்தர் பதவியைப் பொறுப்பேற்பார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இம்மாத மூன்றாவது வாரத்தில் யாழ். பல்கலைக்கழக பேரவை கூடி துணைவேந்தர் நியமனத்திற்கான மூவருடைய பெயர்களைத் தெரிவு செய்து பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிற்கு அனுப்பிவைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதில் ஒருவரை மானிய ஆணைக்குழு சிபார்சுசெய்யும் எனவும் அவரை சிறிலங்கா ஜனாதிபதிதுணைவேந்தராக தெரிவுசெய்வார் எனவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

## கடற்படை படகுகள் மீனவர்மீது துப்பாக்கிச் சூடு

(யாழ்ப்பாணம்)

வெளிச்சம் பாய்ச்சியபடி படகுகளில் வந்த கடற்படையினர் மீனவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒரு மீனவர் படுகாயமடைந்தார்.

நேற்றிரவு சுமார் 9-00மணியளவில் குருநகரை அண்டிய கடற்பகுதியிலேயே இத் தாக்குதல்சம்பவம்இடம்பெற்றது.

செபஸ்ரின் சிறில்(வயது35) என்றமீனவரேபடுகாயமடைந்துள்ளார்.

வழமைபோல நேற்றிரவும் மீன்பிடிக்கும் நோக்கில் குறிப்பிட்ட கடற்பகுதியை அண்மித்த போது திடீர் என்று கடலிலிருந்து மீனவர்களை நோக்கி வெளிச்சம் பாய்ச்சியபடி

(4ஆம் பக்கம் பார்க்க)

## எறிகணை வீச்சு

நேற்று பிற்பகல் 3-10மணியிலிருந்து தீவகப் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவ முகாமில் இருந்து யாழ். கரையோரப் பகுதிகளை நோக்கி எறிகணை, கலிபர் தாக்குதல்

(4ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

1-2-94 அன்று நல்லூருக்கும் கிளாலிக்கும் இடையில் மண்ணிற பேர்ஸ் ஒன்றுடன் ஒரு தொகைப் பணமும், சிறு பிள்ளைக்குரிய காதணியும் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் திருமதி கு. மனோகரன் ''சிவபாலன் மில்'' தேவாலய வீதி, உடுப்பிட்டியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (7470)

### நாளை சனிமாற்றம்

நாளை வாக்கியப்படி (11-2-1994) வெள்ளிக்கிழமை இரவு 10.02 மணியளவில் சனி பகவான் கும்பராசிக்கு மாற்றமடைகின்றார். சனி மாற்றம் ரூ. 10/- விற்பனையாகின்றது. V. பாலா, சோதிட நிலையம் இணுவில். (7473)

### SPECIAL ENGLISH

உதவி ஆங்கில ஆசிரியர் தேர்வு N. C. E Spoken English, ஆண்டு 4-11 வரையிலான விசேட ஆங்கில வகுப்புகளின் புதிய பிரிவுகள் 11-2-1994 வெள்ளி ஆரம்பமாகின்றன. Sivalingam புதிய ஆங்கில கல்வி நிலையம் 82, பருத்தித்துறை வீதி, ஆரியகுளம், யாழ்ப்பாணம். (7471)

### விற்பனைக்கு

சகல வசதிகளும் கொண்ட 2 பரப்பு காணியும், வீடும் திருநெல்வேலி சந்தைக்கு அருகாமையில் M. P. C. S லேன் திருநெல்வேலி வடக்கில் உண்டு. தொடர்பு திருமதி வனிதா தேவி விவேகானந்தம் செம்பாட்டு லேன், பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு. (மேஜர் முரளி பாலர் பாடசாலைக்கு அருகாமையில்) (7478)

### வெளிவாரி மாணவர் பரீட்சை முடிவு

யாழ். பல்கலைக்கழக வெளிவாரி மாணவர்களின் கலை முதற்தேர்வு, வர்த்தக முதற்தேர்வு ஆகிய பாடங்களுக்கான பெறுபேறுகள் இன்று வெளிவருகின்றன என யாழ். பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கான பரீட்சைகள் கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்றது என்பது குறிப்பிடத்


## இளங்கலைஞர் மன்ற 14வது ஆண்டு இசைவிழா

இடம்: மன்ற கலாமண்டபம்
காலம்: 12.02.94 — 26.02.94
தினமும் பி. ப. 4-00 — இரவு 10-00 மணி.

மேற்படி விழாவில் நாதஸ்வர, தவில், வாய்ப்பாட்டு, வயலின், வீணை, வேணு கானம், மிருதங்க இசை, வில்லிசை, கதாப் பிரசங்கம், பரதநாட்டியம் போன்ற பல தரப்பட்ட இசை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். இளங்கலைஞர்களும் முன்னணிக் கலைஞர்களுமாக 500க்கு மேற்பட்ட கலைஞர்கள் பங்கு கொள்வர்.

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்,

மேற்படி மன்றத்தினர்

(சி-8560)


## 7 வறிய குடும்பங்களுக்கு தையல்இயந்திரவிநியோகம்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கிராமிய உற்பத்திக் குழுவானது கிராமிய மேம்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில் கிளிநொச்சி பாரதிபுரம் கிராமத்திலுள்ள வறுமைக்கோட்டின்கீழ் வாழும் ஏழு குடும்பங்களுக்கு தையல் தொழிலை மேற்கொள்ளும் பொருட்டு தையல் இயந்திரங்களை வழங்கியுள்ளது.

இதன்மூலம் குறிப்பிட்ட ஏழு குடும்பங்களும் சுய தொழிலை மேற்கொண்டு சுயமாக வாழ வழிஏற்பட்டுள்ளது.


## 25,000 தக்காளிக் கன்றுகள் முற்றிலும் இலவசம்

ஒவ்வொரு ஜாம் போத்தல் ஒப்படைக்கும் போதும் ஜாம் போத்தலுக்குரிய பணத்தைப் பெறுவதுடன் 5 தக்காளிக் கன்றுகளை முற்றிலும் இலவசமாக பெற்றுக் கொள்ளுங்கள். இச் சலுகை கன்றுகள் உள்ளவரை மட்டுமே.

TASTE LINE INDUSTRIES (PVT) LTD.
14, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

(சி-8562)


## யாழ்ப்பாணம் ப.நோ.கூ.சங்கம்- வரையறுக்கப்பட்டது

## 31.12.1992இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான-கிராமிய வங்கி மீதிகளை உறுதிப்படுத்தல்

மேற்படி சங்கத்தின் 31-12-1992இல் முடிவடைந்த வருடத்துக்கான கணக்காய்வு நடைபெற்றுக்கொண்டு இருப்பதால், கிராமிய வங்கி வாடிக்கையாளர்கள் அனைவரும் கீழ்குறிப்பிடப்படும் திகதிகளில் தமது வங்கி சேமிப்பு கையேடுகளுடன் இல. 291, ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் வந்து, தமது மீதிகளை உறுதிப்படுத்திச் செல்லுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

15-2-94—9.00 மணி முதல் 4.00 மணி க/கு இல வரை 1—746
50012—51200

16-2-94—9.00 மணி முதல் 4.00 மணி வரை 51201—51600

17-2-94—9.00 மணி முதல் 4.00 மணி வரை 51601—52069

மேற்குறிப்பிட்ட திகதிகளில் வந்து உறுதிப்படுத்தாத வாடிக்கையாளர்களின் கணக்கு மீதிகள் வங்கியின் பேரேட்டின்படி உறுதிப்படுத்தப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

செல்வி யோ. தில்லைநாதன்
சிரேஷ்ட கணக்காய்வாளர்.

10-2-94 (சி-8593)


அதிசயம்; ஆனால் உண்மை!
நம்பமுடியாது; ஆனால் நடந்திருக்கிறது தமிழீழத்தில்!

15.02.94 முதல் வரலாற்று பெருமை மிக்க

## "ஒப்பரேசன் தவளை"

(முழுநீள பூநகரிச் சமர்)

ஒளிநாடாவில் நேரடியாகக் காணலாம்.

- சகல வீடியோ நாடா விநியோகஸ்தர்களும், கலை ஊடக இணையத்தில் உங்கள் பதிப்புக்கான வீடியோ நாடாவை முன்கூட்டியே வழங்கிப் பதிவு செய்த (RECORDING) நாடாவைப் பெற முந்திக் கொள்ளுங்கள்.
- இது தமிழீழ வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த பொக்கிஷமாகையால் அனைத்துத் தமிழீழ மக்களும் வைத்திருக்க வேண்டிய ஒளிநாடா,
- யாழ். மாவட்டத்திலுள்ள சகல வீடியோ கடைகளிலும் 15-02-94 முதல் பெற்றுக் கொள்ளலாம்.

குறிப்பு:- ''ஒப்பரேசன் தவளை'' பதிவு செய்து விநியோகிக்கும் உரிமை கலை ஊடக இணையத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

கலை ஊடக இணையம்
117, மானிப்பாய் வீதி,
ஐந்துசந்தி, யாழ்ப்பாணம்.

(சி-8577)


உ

தசாகாதி

## கிருகயக்ஞ அழைப்பிதழ்

அன்புடையீர்,
ஸ்ரீமுக வருஷம் தைமாதம் 21ம்நாள் (3-2-1994) வியாழக்கிழமை சிவபதமடைந்த எமது தாயார் இராசலட்சுமி அம்மா (சின்னக்குரு அம்மா)

தோற்றம்:
10 - 07 - 1938

மறைவு:
03 - 02 - 1994



### இராசலட்சுமி அம்மா
(சின்னக்குரு அம்மா)

அவர்களின் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும் அனைவரும் வந்து அன்னாரின் ஆத்மா சாந்திபெற பிரார்த்திப்போம்.

12-02-1994 சனிக்கிழமை-தசாகம்.
13-02-1994 ஞாயிற்றுக்கிழமை-ஏகோதிஷ்டம் மாசிகம்
14-02-1994 திங்கட்கிழமை-சபிண்டீகரணம்.
15-02-1994 செவ்வாய்க்கிழமை-கிருகயக்ஞம்.

## நினைவு கூருகின்றோம்.

## 1994-02-10

1986ஆம் ஆண்டு இதேதினத்தில் திருமலை-தம்பலகமம் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட 04 தமிழர்கள்.

வவுனியா - யாழ் வீதியில் வைத்துச் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டு காட்டுக்குள் போட்டு எரிக்கப்பட்ட 04 தமிழர்கள்.

1987ஆம் ஆண்டு வெடிகுண்டு விபத்தில் எமைப் பிரிந்த-

**பிரான்சிஸ் மனோகரன்** (பெரியவிளான் யாழ்)

பூநகரிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய-

**விசு** (நமசிவாயம் சித்திரவேல் - 4ம் கட்டை பூநகரி கிளி)

யாழ் - வல்வை தொண்டமானாற்றுப் பகுதியில் சிறிலங்கா இராணுவக் காவலரண்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய-

**2ம் லெப். ரவி-பூலோகம்** (முத்தையா தங்கத்துரை - முள்ளியான், வடமராட்சி கிழக்கு - யாழ்)

1989ஆம் ஆண்டு மன்னார் - பேசாலைப் பகுதியில் தேசவிரோதக் குழுவினரின் முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட அதிரடித்தாக்குதலின்போது வீரச்சாவெய்திய-

**கப்டன் காண்டீபன்** (சின்னத்துரை கேதீஸ்வரன் உயிலங்குளம் - மன்னார்)

**லெப். சௌகான்** (அந்தோனி மரியதாஸ் குலாஸ் தோமஸ்புரி வங்காலை - மன்னார்)

**2ம் லெப். பொஸ்ரின்** (சந்தியோகு சூசை சற்குரூஸ் - பட்டித்தோட்டம் - மன்னார்)

இந்தியப்படையினரால் ஒரு சம்பவத்தின்போது

டாரங்கள் தெரிவித்தன.
இதற்கான பரீட்சைகள் கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்றது என்பது குறிப்பிடத் தக்கது.

(சி-8577)

117, மானிப்பாய் வீதி,
ஐந்துசந்தி, யாழ்ப்பாணம்.

## அரை ஆண்டு நினைவுகள்

தரை:
03
-
06
-
1935

கடல்:
10
-
08
-
1993



திருமதி

## இரத்தினேஸ்வரி நடனசிகாமணி

அரை ஆண்டு சென்றாலும் ஆறுமோ எம் துயரம்
அம்மா, அம்மா என அழுதாலும் ஆறுமோ எம் துயரம்
ஆற்றுவார் யார் இருக்கார்
அம்மா, அம்மா என அழுவதைத்தவிர:

கப்டன் அலன் வீதி;
அம்மன் கோவிலடி,
வல்வெட்டித்துறை;

(7465)

வ. இ. நடனசிகாமணி
குடும்பத்தார், உற்றார், உறவினர்.

நடைபெறும் அனைவரும் வந்து அன்னாரின் ஆத்மா சாந்திபெற பிரார்த்திப்போம்.

12-02-1994 சனிக்கிழமை-தசாகம்.
13-02-1994 ஞாயிற்றுக்கிழமை-ஏகோதிஷ்டம் மாசிகம்
14-02-1994 திங்கட்கிழமை-சபிண்டீகரணம்.
15-02-1994 செவ்வாய்க்கிழமை-கிருகயக்ஞம்.


முக்கிய குறிப்பு:
15-02-1994 செவ்வாய்க்கிழமை சாரதாபீட இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் அனைவரும் கலந்து சிறப்பிக்குமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இதை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்

தனிப்பட்ட அழைப்பு இல்லை.

- குடும்பத்தினர்

சாரதாபீடம்,
துன்னாலை (7454)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி

## தம்பையா சின்னப்பிள்ளை

திதி: 10.02.1994

தந்தை இறந்த தாக்கம் எம்மை சாராமல்
தந்தையாய் தாயாய் தகை சான்ற ஆசானாய்
சிந்தை எல்லாம் எஞ்ஞான்றும் எம்நலமே நினைத்து
எந்தையே தாயே நீ எங்கள் தெய்வம் ! அம்மா
இந்த உலகின்பங்கள் எல்லாமே எமக்களித்து
இந்தப் பிறவி எடுத்த பணி முடித்துப்பேர்
இன்பத்தை தேடிப் புகுந்தனையோ பொன்னுலகு
உந்தன் நினைவோடு நாம் வாழ்வோ மென்னாளும்

வே. த. இரத்தினசிங்கம்,
"சங்கிறி—லா"
மானிப்பாய். (7469)

மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

உயிலங்குளம் - மன்னார்)

**லெப். சௌகான்** (அந்தோனி மரியதாஸ் குலாஸ் தோமஸ்புரி வங்காலை - மன்னார்)

**2-ம் லெப். பொஸ்ரின்** (சந்தியோகு சூசை சற்குருஸ் - பட்டித்தோட்டம் - மன்னார்)

இதேசம்பவத்தின்போது இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 04 தமிழர்கள்

1990ஆம் ஆண்டு முல்லைத்தீவில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட துப்பாக்கிச்சூட்டில் எமைப்பிரிந்த-

**ஆனந்தராசா** (சிதம்பரப்பிள்ளை சரவணன்-வட்டுவாகல் - முல்லைத்தீவு)

1991ஆம் ஆண்டு வவுனியா, பறநட்டகல்பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**2-ம் லெப். ஜனா** (விசுவலிங்கம் விஜயகுமார்-ஒட்டிசுட்டான்வீதி, சாளம்பன் - மணலாறு)

**வரதன்** (மயில்வாகனம் சத்தியசீலன்-12ஆம்கட்டை புளியங்குளம் - வவுனியா)

**பிறேமன்** (சிவலிங்கம் உதயகுமார் - சின்னத்தம்பனை வவுனியா)

இதேசமரின்போது நிகழ்ந்த விமானத்தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**மகான்** (பெருமாள் விஜயசுந்தரம் - வாரிஉடையார் இலுப்பைக்குளம் - வவுனியா)

மன்னாரில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**துஷ்யந்தன்** (வசிட்டன் மோகனராசா - ஆனந்தபுரம் - மணலாறு)

வவுனியா - நொச்சிமோட்டைப் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**2-ம்லெப். கருணா** (சின்னத்தம்பி பிரேம்குமார். இல.78, 1ஆம் படிவம் சேமமடு - வவுனியா)

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட ஏறாவூர்- தளவாயைச்சேர்ந்த தமிழிளைஞன்:

1992ஆம் ஆண்டு மட்டு- 6ஆம் கட்டைப்பகுதியில் ரோந்து சென்றபோது தவறுதலாக ஆற்றில் விழுந்து விழுப்புண் அடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**கல்யாணி** (பூமணி வைரமுத்து - சிற்றாண்டி-மட்டு

திருமலை - பாட்டாளிபுரத்தில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட உப்போடை முகத்துவாரம், சீனன்குடாப் பகுதிகளைச் சேர்ந்த 04 தமிழர்கள்;

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்-

## தமிழீழ விடுதலைப் புலிகள்.

(ஊ-8575)

சிந்தனைக்கு

பளிங்கு என்று இளமை கருதியதை
வெறும் பனித்துளி என்று முதுமை உணர்கிறது:
-- ராபட் பிரௌனிங்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 10-02-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023
தபால் பெட்டி எண் 05

# நன்றி உணர்வற்ற பேரினவாதம்

கடந்த இருவாரங்களாக விமானத்தாக்குதல்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும், இதற்கு இன்னும் ஒருவாரத்தில் ஓய்வு பெற்றுச் செல்லவுள்ள விமானப் படைத் தளபதி தாக்குதலுக்கு உத்தரவிடாமையே காரணம் எனவும் விமானப்படைத் தளபதி மீது அதிகாரிகள் மட்டத்தில் அதிருப்தியும், பேரினவாதிகள் மட்டத்தில் ஓரளவு கண்டனமும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் விமானப்படைத் தளபதியின் இந்நடவடிக்கைக்குப் ''போகிறவழிக்கு புண்ணியம் தேடும் நடவடிக்கை'' என்றும் காரணம் கற்பிக்கப்பட்டுள்ளது. இதேவேளை பேரினவாதப் பத்திரிகை ஒன்று ''தனிப்பட்ட ரீதியிலான முடிவைக் கைவிட்டு தேசிய பாதுகாப்பைக் கருத்திற் கொண்டு இன்றைய நிலையில் எதிரி பலமடைவதைத் தடுக்க வேண்டும்'' என விமானப் படைத் தளபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அதாவது இருவாரங்களாக தமிழ் மக்கள் மீது விமானக் குண்டு வீச்சுத் தாக்குதலை ஏன் நடத்தவில்லை, இனப்படுகொலைகளை ஏன் புரியவில்லை, என்பதே இவ் அதிருப்திக்கும், கண்டனத்திற்கும் காரணமாகும்.

ஆனால் விமானப்படைத்தளபதி இரண்டு வாரங்கள் மட்டும் விமானத்தாக்குதலுக்கு உத்தரவிடாமையால் கடந்த காலத்தில் அவர் காரணமாக இருந்த இனப்படுகொலைகள் மறைந்துவிடப் போவதோ, அன்றி குற்றச்சாட்டை சுமத்துபவர்கள் கூறுவதுபோன்று போகின்ற வழிக்கு புண்ணியம் தேடிவிடக் கூடியதோ அல்ல; ஏனெனில், விமானப்படைத் தளபதி ஏயர் மார்ஷல் ரெறன்ஸ் குணவர்த்தனா காலத்தில் அவர் பல நூற்றுக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்களை கொன்று குவிக்கும் தாக்குதலுக்கு உத்தரவிட்டுள்ளார். இதில் வயது, பால் வேறுபாடு இன்றிப் பலர் கொல்லப்பட்டும், படுகாயமடைந்தும் உள்ளனர்.

''எனது பதவிக்காலத்தில் போதுமான அளவு இரத்தம் சிந்துவதைப் பார்த்துவிட்டேன், பாதுகாப்பு படையில் இனிமேலும் எந்த பதவியையும் வகிக்கநான் விரும்பவில்லை'' எனக் கூறியதில் இருந்து, விமானப் படைத்தளபதி தான் புரிந்த படுகொலைகளைப் பற்றி

# காமினியை சேர்த்ததால் கட்சிக்குள் பிளவு இல்லை

## ஐ. தே. க. செயலாளர் அறிவிப்பு

(கொழும்பு)

ஐ. தே. கவில் மீண்டும் காமினியை இணைத்துள்ளதால் ஆளும் கட்சியினுள் பிளவு ஏற்பட்டு விட்டதாக வந்த செய்திகளை கட்சியின் பொதுச்செயலர் சிறிசேன கூரே மறுத்துள்ளார்.

காமினியை மீள சேர்த்துக் கொண்டதால் ஜனாதிபதி விஜேதுங்கா, பிரதமர் ரணில் மற்றும் சிறிசேன கூரே ஆகியோரின் தலைமைகளில் கட்சி மூன்றாக பிளவுபட்டு நிற்பதாக வெளியான செய்திகள் ஆதாரமற்றவை என கூரே மறுத்துள்ளார். காமினியை மீளச்சேர்த்தமை தனியே ஜனாதிபதியின் முடிவல்ல. அதுபிரதமருடையதும் மற்றைய அனைத்து உறுப்பினர்களுடையதும் தான் என அவர் குறிப்பிட்டார்.

# பாராளு. உறுப்பினராக சந்திரிகா நியமிக்கப்படலாம்

(கொழும்பு)

மேல் மாகாண முதல் அமைச்சர் சந்திரிக்கா குமாரணதுங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினராக தேசிய பட்டியல் மூலம் நியமனம்பெறவுள்ளார் என சுதந்திரக்கட்சி வட்டாரங்கள் ''லக்திவ'' பத்திரிகைக்கு தெரிவித்துள்ளது.

இதன்படி மேல் மாகாண முதல் அமைச்சர் பதவியை ஏ. எச். எம். பௌவுசிக்கு வழங்கப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. காமினி திசநாயக்காவின்ஆதரவாளர்கள் ஐக்கிய தேசிய கட்சியுடன் சேர்ந்துமேல் மாகாண சபையின் ஆட்சியை கைப்பற்றலாம் என எழுந்த அச்சமுமே சந்திரிகாவைபாராளுமன்ற உறுப்பினராக்கும் யோசனைக்கு காரணம் என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை தேசியப்பட்டியல் மூலம் சுதந்திரக்கட்சி பாராளுமன்ற உறுப்பினராக இருந்த ராஜரட்ணத்தின் மறைவைத் தொடர்ந்து அவரின் வெற்றிடத்தை இவரின் நியமனம் மூலம் நிரப்ப ஏற்பாடு மேற்கொள்ளப்படும் என நம்பப்படுகிறது.

# பழுதடைந்த மரைவற்றல் சந்தையில் விற்பனை

## சுகாதார அதிகாரி எச்சரிக்கை

(குருநகர்)

வன்னிப் பகுதிகளில் இருந்து எடுத்துவரப்பட்ட பழுதடைந்த மரை வற்றல் சந்தைகளில் விற்பனை செய்யப்படுவது யாழ் மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரியால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவற்றை உண்பதினால் புற்றுநோய் மற்றும் குடல் சார்ந்த நோய்கள் உருவாகும் அபாயம் உண்டென்றும் சுகாதார வைத்திய அதிகாரி எச்சரித்துள்ளார். (21)

# பேராதனைசென்றயுவதிகள் நாவலப்பிட்டியில் கைது

(பேராதனை)

பேராதனை பல்கலைக்கழக பல் மருத்துவ பீடத்திற்குத் தெரிவான வவுனியாவைச் சேர்ந்த மாணவி ஒருவரும், அவருடன் துணைக்கு வந்த யுவதிகள் இருவரும் நாவலப்பிட்டி பொலிசாரால் கைது செய்யப்பட்டு கண்டி சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

வவுனியாவைச் சேர்ந்த பகீரதி வாமதேவன் என்பவர் பேராதனை பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகியதைத் தொடர்ந்து அவர் கடந்த 27ம் - திகதி நேர்முகப் பரீட்சைக்காக பேராதனை சென்றிருந்தார். நேர்முகப் பரீட்சை முடிவுற்ற பின் வவுனியா திரும்புவதற்காக

# பத்தாயிரம் ரூபா அன்பளிப்பு

(தொல்புரம்)

சங்கானை வட்டப்பிரதேச வர்த்தகர்களின் நலனையொட்டி வலிமேற்கு வர்த்தக சமி

# ஜனாதிபதியின் சிங்கள பாதுகாவலர் வேடம் பொதுத் தேர்தலை ஒட்டியதே

## 'சிலுமின'வில் வாசகர் ஒருவர்கருத்து

சிறுபான்மை தமிழர் கோரிக்கைக்கு பெரும்பான்மை சிங்கள பௌத்த மக்களின் உரிமைகளை எவருக்கும் தாரைவார்க்க முடியாது: நாட்டின் ஜனாதிபதி என்ற வகையில் பெரும்பான்மை சிங்கள மக்களுக்கும் தாய் நாட்டிற்கும் நான் துரோகமிழைக்க மாட்டேன்; இவ்வாறு ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா கூறுவதின் அர்த்தமென்ன? பத்திரிகையில் அடிக்கடி டி. பி. விஜேதுங்காபௌத்த சிங்கள பாதுகாவலன் என தன்னைப் பற்றி விளம்பரப்படுத்திக் கொள்வதற்குக் காரணம் பொதுத்தேர்தல் கதவைத் தட்டிக் கொண்டிருக்கிறது என்பது விடயம் தெரிந்தவர்களுக்குத் தெரியும்.

மேற்கூறியவாறு 'சிலுமின' வாசகர் 'செனமி' என்பவர் எழுதியுள்ளார். தொடர்ந்து அவர் சிலுமினவில் எழுதியிருப்பதாவது,

பெரும்பான்மை பௌத்த மக்களின் வாக்குகளை அபகரித்துக் கொள்வதற்கான முன்னேற்பாடு ஆளும் கட்சியில் இடம்பெறுகிறது எனலாம். எல்லாம் அரசியல் இலாபம் கருதியே நடைபெறுகிறது. தேசிய நலனோ வளமோ இவர்களுக்கு அக்கறையில்லை.

மத்திய மாகாண சபை தேர்தலின் போது இ. தொ. கா. தலைவர் தொண்டமானின் உதவியை யாசித்துப் பெற்றுக் கொண்டு பின்னர் தொழிலாளர்களுக்கு வசதி செய்து கொடுக்குமாறு தொண்டமான் கேட்டதும் அவரை நட்டாற்றில் ஐ. தே. க. கைவிட்டு விட்டதென்றால் மிகையாகாது என அந்த வாசகர் குறிப்பிட்டுள்ளார்.

# நாற்பது ஆண்டு பூர்த்தி விழா

மல்லாகம் கிராம அபிவிருத்தி சங்கத்தின் நாற்பதாண்டு மலர் வெளியீடும் சேவை நலம் பாராட்டுதலும் எதிர்வரும் ஞாயிறன்று மல்லாகம் மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அத்துடன் இக்கிராம அபிவிருத்தி சங்கத்தின் நாற்பது ஆண்டு காலப் பூர்த்தியை முன்னிட்டு மல்லாகம் கொத்தணியில் இருக்கும் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் மற்றும் மல்லாகத்தைச் சேர்ந்த மாணவர்கள் மத்தியில் பண்ணிசைப் போட்டி, கிறிஸ்தவ சமயப் போட்டி, மாலை கட்டும் போட்டி, கோலம் போடும் போட்டி, கவிதைப் போட்டி, பொது அறிவுப்போட்டி என்பனவும் நடத்தப்படுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

# ஆகாயத்தாமரைகள் அகற்றப்படுகின்றன

(குருநகர்)

யாழ் - நகரப் பகுதிகளில் உள்ள குளங்களில் அநேகமாக தேயமாக முளைத்து அதிகரித்து வரும் ஆகாயத்தாமரை பூண்டுகளை அகற்றும் பணியில் யாழ். மாநகர வேலைப் பகுதியினர் ஈடுபட்டு வருகின்றனர்.

யாழ்-ஆரியகுளத்தில் இத்தகைய பூண்டுகளை அகற்றும் பணியில், வள்ளத்தில் வேலையாட்கள் சென்று பூண்டுகளை பிடுங்கி கரை சேர்க்க ட்ராக்டர்கள் அவற்றை எடுத்துச் சென்று குப்பை நிரப்பும் பகுதிகளில் கொட்டி வருகின்றன. (21)

# இலவச வகுப்புகள்

(தொல்புரம்)

தமிழீழ விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பினால் நடாத்தப்படும் நிச்சாமம் கல்வி வளர்ச்சிக் கழகத்

# வட-கிழக்கு பிரச்சினையை எப்படியும் தீர்க்க வேண்டும்

## -அநுரா பண்டாரநாயக்க

(கொழும்பு)

பேச்சுவார்த்தை மூலமோ அல்லது வேறு எந்த முறையிலாவது வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு காணப்படல் வேண்டும். இதற்காக அரசியல் கட்சிகள் தமதுபேதங்களை மறந்து தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்க முன்வரவேண்டும். இவ்வாறு உயர்கல்வி அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க கூறியுள்ளார். அண்மையில் சுசரித்தவில் நடைபெற்ற ஐ. தே. கட்சியின் மத்திய கொழும்பு அமைப்புக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய அவர் மேலும் குறிப்பிடுகையில்; இவ்வாறு செய்வதன் மூலமே வடக்கு- கிழக்கு பிரச்சினை, வேலையில்லாப் பிரச்சினை உட்பட அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வு காணமுடியும் எனவும் தெரிவித்தார்.

ஏனைய கட்சிகளில் இருப்பவர்கள் எல்லாம் ஐக்கிய தேசியக் கட்சியில் சேருவதன் மூலம் இலங்கையில் தனிக் கட்சிஆட்சி ஏற்படலாம். அவ்வாறு ஏற்படுவதே நல்லது. செய்த உதவியை மறப்பதில் சிறந்த இனம் சிங்கள இனமே என்றும் நண்பர்கள் எதிரிகளாவதை விட எதிரிகள் நண்பர்களாவதே சிறந்தது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மர முந்திரிகை நாற்று இலவச விநியோகம்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் முல்லை மாவட்ட விவசாயப் பகுதியினர் 10 ஏக்கர் பண்ணைத் திட்டத்தில் போடப்பட்டிருந்த மரமுந்திரிகை நாற்று மேடையில் இருந்து மரமுந்திரிகைக் கன்றுகளை இலவசமாக விநியோகித்து வருகின்றனர்.

இம்மாவட்டப்பாடசாலைகளிற்கும், ஒட்டிசுட்டான் கமநல சேவை நிலையத்தினூடாக அப்பகுதி மக்களிற்கும் இக்கன்றுகள் விநியோகிக்கப்படுகின்றன.

இப்பண்ணைத் திட்டத்தில் இதுவரை 2000 நல்லினத் தென்னம்பிள்ளைகள் விற்பனை செய்யப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் மக்கள் நல்லின மரங்களை வளர்ப்பது அதிகரிக்கிறதென்பது குறிப்பிடத்தக்கது.

# கட்டடத் தொழிலாளர்கள் மௌன ஊர்வலம்

இரத்தம் ...
படையில் இனிமேலும் எந்த பதவியையும் வகிக்கநான்
விரும்பவில்லை'' எனக் கூறியதில் இருந்து, விமானப்
படைத்தளபதி தான் புரிந்த படுகொலைகளைப் பற்றி
தானே ஒப்புதல் வாக்கு மூலம் அளித்துள்ளார்.

இந்நிலையில் இருவாரத் தாக்குதலை நிறுத்துவ
தால், விமானப்படைத்தளபதி பற்றிய தமிழரின் மதிப்
பீட்டில் உயர்ந்து விடப்போவதோ அன்றி விமானத்தாக்
குதலை நடத்துவதால் சரிந்துவிடப் போவதோ இல்லை.
அத்தோடு விமானப்படையினரின் தாக்குதல்கள் விடுத
லைப் புலிகளின் இராணுவ ரீதியாகப் பலமடைவதைத்
தடுத்து விடக் கூடியதுமல்ல, அவ்வாறு தடுக்க முடியு
மானால் கடந்த காலத்தில் அது நிறைவேற்றப்பட்டி
ருக்க வேண்டும். ஆனால் இவையாவும் விமானப்
படைத் தளபதிக்கும் தெரியாத தொன்றல்ல.

ஆகையினால், விமானப்படைத்தளபதி பேரினவா
திகள் கூறுவது போன்று தாக்குதல்களை இடை
நிறுத்தியிருந்தால், அதற்கான காரணம் அவர்கள்
கூறுவதாக இருக்கப் போவதில்லை. மாறாக, அவரின்
நீண்டகால அனுபவத்தில் அவர் சிறிலங்கா அரசிய
லில் பெற்றுக் கொண்ட கசப்பான பாடமே காரணமாக
இருக்க முடியும்.

இவற்றில் முன்னாள் இராணுவத்தளபதி லெப்.
ஜெனரல் சிசில் வைத்தியரெட்ணாவின் இறுதிக்காலம்
முக்கியமானதாகும். தமிழருக்கு எதிராக வரிந்து
கட்டிக்கொண்டு இனப்படுகொலையில் ஈடுபட்டவரும்,
அரசாங்கத்தைப் பாதுகாக்கவென தமது இனத்தின
ரையே ஆயிரக்கணக்கில் அழித்தவருமான சிசில் வைத்
தியரெட்ணாவிற்கு இறுதி நேரத்தில் கிடைத்த அவமரி
யாதையை ஒருபோதும் விமானப்படைத்தளபதி
ரெறன்ஸ் குணவர்த்தனா மறந்திருக்க மாட்டார்' அது
வும் கடந்த காலத்தில் சிசில் வைத்தியரெட்ணாவுடன்
நெருங்கி உழைத்தவர் என்ற ரீதியில் அவருக்கு ஏற்
பட்ட அவமானத்தை தனக்கு ஏற்பட்ட அவமானமா
கவே ரெறன்ஸ் குணவர்த்தனா கருதுவதிலும் தவ
றில்லை. அத்தோடு இறுதிக்காலத்தில் தன் மீதும் சில
குறைகளைக்கண்டு பிடிக்க அரசியல்வாதிகளும், அதிகாரி
களும் முற்பட்டதையும் அவர் மறந்திருக்க நியாய
மில்லை.

இந்த வகையில் ரெறன்ஸ் குணவர்த்தனா தமிழர்
மனங்களில் இடம்பிடிக்கவோ, அன்றி போகின்ற வழிக்
குப் புண்ணியம் தேடவோ தாக்குதலை நிறுத்தியிருக்க
முடியாது. ஆனால் தாம் புரிந்த படுகொலைக்கு நன்றி
தெரிவிக்க சிங்களப் பேரினவாதம் தவறிவிட்டது என்ற
ஆதங்கத்தில் தாக்குதலை நிறுத்தியிருக்கலாம். ஒரு
இனத்தை அழிக்க உதவி புரிந்தவருக்கு குறைந்தது
நன்றியாவது தெரிவிக்காது விட்டால் விரக்தி ஏற்படுவது
தவிர்க்க முடியாதது தானே!

சங்கானை வட்டப்பிரதேச
வர்த்தகர்களின் நலனையொ
ட்டி வலிமேற்கு வர்த்தக சங்
கத்தினால் ஆரம்பிக்கப்பட்
டுள்ள மரணக் கொடுப்பனவு
நிதியத் திட்டத்திற்கு அமை
வாக முதலாவது மரணக்
கொடுப்பனவு உதவியாக
அண்மையில் மரணமடைந்த
வலிமேற்கு வர்த்தக சங்க
உறுப்பினரும், வட்டுக்கோ
ட்டை சலவைத் தொழிலக
உரிமையாளருமான அமரர்
க. இராசதுரை அவர்களின்
குடும்பத்தினருக்கு பத்தாயி
ரம் ரூபா மேற்படி சங்கத்தி
னால் அன்பளிப்பாக வழங்
கப்பட்டது. இத்திட்டத்தை
மேலும் ஊக்குவிக்கும் முக
மாக வலிமேற்குப் பிரதேசத்
தைச் சார்ந்த வர்த்தகர்கள்
அநேகர் இணைந்துள்ளனர்
என தெரியவருகிறது. (41)

...றிருந்தார். ...
ட்சை முடிவுற்றபின் வவு
னியா திரும்புவதற்காக
பேராதனை சென்ற இவர்
தவறுதலாக நாவலப்பிட்டி
செல்லும் ரயிலில் ஏறியிருந்
தார் என்றும், நாவலப்பிட்
டியில் இரவு நேரம் தரித்திரு
ந்த இந்த ரயிலை சோதனை
யிட்ட பொலிசாரால் இம்
மூவரும் கைது செய்யப்பட்ட
னர் என்றும் கூறப்பட்டுள்
ளது. இம் மூவரைக் கைது
செய்த பொலிசார் நாவலப்
பிட்டி நீதிமன்றத்தில் ஒப்
படைத்ததைத் தொடர்ந்து
அவர்கள் விளக்கமறியலில்
வைக்கப்பட்டுள்ளனர்.

இம் மூவரையும் காணவில்
லையென இவர்களது பெற்
றோர் வவுனியா பொலிஸ்
நிலையத்தில் முறைப்பாடு
செய்திருந்தது தெரிந்ததே.

...கள் மாணவர் அமைப்பி...
னால் நடாத்தப்படும் நிச்சா
மம் கல்வி வளர்ச்சிக் கழகத்
தில் இலவச கல்வி வகுப்புக்
கள் வெகு சிறப்பாக நடை
பெற்று வருகின்றன.

சங்கானை விக்னேஸ்வரா
வித்தியாலய மண்டபத்தில்
நடாத்தப்படும் மேற்படி வகு
ப்புகள் பகல் வேளைகளில்
ஆண்டு 1 முதல் ஆண்டு 8
வரை கல்வி கற்கும் மாணவ,
மாணவியருக்கு சிறந்த முறை
யில் கல்விகற்பிக்கப்படுகிறது.
இரவு வேளைகளில் மீட்டல்
(சுயகல்வி) வகுப்புகள் பெற்
றோமாக்ஸ் லாம்பு வெளிச்ச
வசதியுடன் நடாத்தப்படுகின்
றன. மேற்படி இலவச கல்
விச் சேவையினால் அநேக
மாணவர்கள் பயனடைந்து
வருகின்றனர். (41)

# மௌன ஊர்வலம் நடாத்த ஏற்பாடு

(தொல்புரம்)

வறுமை நிவாரணம் தொட
ர்ந்து கிடைக்கவும் கட்டடத்
தொழிலாளர்களுக்கு மாற்
றுத் தொழில் வசதி ஏதும்
கிடைக்கவும் ஆவன செய்யக்
கோரி மௌன ஊர்வலம்
நடாத்தி மகஜர் கையளிக்கப்
படவுள்ளது.

யாழ் மாவட்ட சீமெந்துக்
கட்டட தொழிலாளர் சங்க
வலிமேற்கு கிளையினால்
நடாத்தப்படும் மௌன ஊர்
வலம் 11ஆம் திகதி வெள்ளிக்
கிழமை காலை 9 மணியள
வில் வட்டு. சங்கரத்தை
கிளைப் பணிமனையில் இரு
ந்து ஊர்வலம் புறப்பட்டு சங்
கானை உதவி அரசாங்க அதி
பர் பணிமனையில் உதவி
அரச அதிபரிடம் மகஜர்
கையளிக்கப்படவுள்ளது என
கிளைச் செயலாளர் திரு. சி.
சிவசம்பு தெரிவித்துள்ளார்.
கடந்த 10 மாதங்களாக
மேற்படி தொழிலாளர்களு
க்கு வறுமை நிவாரணம்
எதுவும் வழங்கப்படவில்லை
என்பது குறிப்பிடத்தக்கது.
(41)

## விடுமுறைகால சந்தைதிறக்கப்படும்

(குருநகர்)

யாழ்நகரப் பகுதியில் இம்
மாதம் முடிவுக்கு உள்ளாக
விடுமுறைகாலச்சந்தைஒன்று
திறந்து வைக்கப்பட இருப்ப
தாக யாழ் மாநகரசபை வட்
டாரங்களில் இருந்து அறிய
வருகிறது.

அழகியல், மளிகைப்பொரு
ள்கள் மற்றும் உடுபுடைவை,
பழவகைகள் ஆகியவற்றை
விற்பனை செய்யும் 42 சிறு
கடைத்தொகுதிகளைக்
கொண்டதாக இவ்விடுமுறை
காலச்சந்தை அமைந்திருக்கு
மென தெரிவிக்கப்படுகிறது.
(21)

# இராணுவத்தீர்வு காண்பதிலேயே சிறிலங்கா முனைப்பாகவுள்ளது

## அகதிகளுக்கான அமெரிக்கக் கமிட்டி அறிக்கை

(வாசிங்டன்)

இந்தியாவிலுள்ள இலங்
கைத் தமிழ் அகதிகள் தமது
நாட்டில் பாதுகாப்பான சூழ்
நிலை உருவாகும்வரை இந்தி
யாவில் தொடர்ந்து தங்கியி
ருக்க அனுமதிக்க வேண்டு
மென அகதிகளுக்கான அமெ
ரிக்கக் கமிட்டி இந்தியாவிடம்
வற்புறுத்தியுள்ளது.

அத்துடன் இலங்கை அகதி
கள் மீதும் அவர்களுக்கு
உதவ விரும்பும் அரசாங்க
சார்பற்ற நிறுவனங்கள்
மீதும் இந்தியா விதித்துள்ள
கட்டுப்பாடுகளைத் தளர்த்த
வேண்டும் எனவும் அக் கமி
ட்டி கேட்டுக் கொண்டுள்
ளது.

அகதிகளுக்கான அமெரிக்க
கமிட்டியின் உறுப்பினர்கள்
1993 செப்டம்பரில் இலங்
கைக்கும் இந்தியாவுக்கும்
மேற்கொண்ட விஜயங்களின்
போது அவதானிக்கப்பட்ட
வைகளின் அடிப்படையில்
ஹிராம் ஏ. ரூய்ஸ் என்பவ
ரால் தயாரிககப்பட்ட இவ்
அறிக்கைமேலும்குறிப்பிடுகை
யில்; இலங்கைஅரசின் படைக
ளுக்கும், விடுதலைப் புலிகளு
க்குமிடையே மோதல் தொட
ர்வதனால் இந்தியாவில்
உள்ள அகதிகளால் நாடு திரு
ம்பிச் செல்வது அசாத்திய
மாகியிருக்கிறது. இனப் பிரச்
சினைக்கான அடிப்படைக்
காரணிகளுக்கு தீர்வு காணப்
படாவிட்டால் மோதல்களு
க்கு முடிவு கட்டுவது சாத்தி
யமானதல்ல. இடம்பெயர்
ந்த இலட்சக்கணக்கான மக்
களும் தங்களது சொந்தப்
பிரதேசங்களுக்கு சென்று
மீண்டும் வழமை வாழ்வை
நடத்துவதும் சாத்தியமாகப்
போவதில்லை. இராணுவத்
தீர்வொன்றைக் காண்பதி
லேயே சிறிலங்கா அரசாங்
கம் முனைப்பாக இருக்கிறது
என்றும் தெரிவிக்கப்பட்டுள்
ளது.

## ஆத்திரம் விவேகமற்றது

ஐ. ஆர். ஏ அரசியற் பிரி
வான சின்பீன் தலைவர் கெரி
அடம்ஸின் அமெரிக்க விஜ
யம்குறித்துபிரிட்டிஷ் பிரதமர்
ஜோன் மேஜரின் ஆத்திரம்
விவேகமற்றது என நியூயோ
ர்க் டைம்ஸ் தனது ஆசிரிய
தலையங்கத்தில் குறிப்பிட்
டுள்ளது.

அராலிக் கடற் பகுதியில்

# மீன் பிடித தொழில் படையினரால் பாதிப்பு

(மானிப்பாய்)

அராலிக் கடற்பரப்பில்
மீன்பிடித் தொழிலில் ஈடு
பட்டுவரும் கடற் தொழிலா
ளர்களது தொழில் வாய்ப்
புக்கள் தீவுப் பகுதியில் நிலை
கொண்டுள்ள இராணுவத்தி
னரால் பெரிதும் பாதிப்படை
ந்துள்ளது. இரவு வேளைக
ளில் மீன்பிடித் தொழிலில்
ஈடுபடும் கடற் தொழிலாளர்
கள் மீது வெளிச்சக் குண்டு
களை வீசி சரமாரியான துப்
பாக்கி பிரயோகத் தாக்குத
லையும், பீரங்கி தாக்குத
லையும் அடிக்கடி மேற்
கொள்வதினால் மீனவர்கள்
தமது தொழிலுக்குச் செல்ல
முடியாத நிலை ஏற்பட்டு
மிகுந்த பொருளாதார நெரு
க்கடிக்குட்பட்டுள்ளனர்.
நேற்று முன்தினம் அதி
காலை 1.30 மணியளவில்
மீன்பிடித் தொழிலில் ஈடு
பட்டுக் கொண்டிருந்த மீன்
பிடி வள்ளங்களின் மீது சர
மாரியான துப்பாக்கித் தாக்
குதல் மேற்கொள்ளப்பட்ட
போது மீனவர்கள் நீரில் குதி
த்து நீந்தி உயிராபத்து எது
வுமின்றி கரைசேர்ந்துள்ள
னர். (07)

## 10-வது வெற்றுப்போத்தல்

### பரிசு குலுக்கல் போட்டியில்

### பரிசுபெற்றோர் இலக்கங்கள் வருமாறு

| | | | |
|---|---|---|---|
| 1961 | 4603 | 4952 | 5253 |
| 1965 | 4610 | 5010 | 5259 |
| 1967 | 4761 | 5017 | 5263 |
| 2739 | 4881 | 5020 | 5272 |
| 2743 | 4884 | 5024 | 5274 |
| 2746 | 4890 | 5032 | 5281 |
| 3703 | 4893 | 5036 | 5287 |
| 3807 | 4894 | 5045 | 5298 |
| 4406 | 4896 | 5140 | 5300 |
| 4540 | 4922 | 5146 | 5303 |

11-வது போட்டியில் இன்றே பங்கு பற்றுங்கள்: பங்குபற்றுவதற்கான நிபந்தனை ஜாம், கோடியல் அல்லது பியர் ஏதாவது 5 போத்தல்களை கொடுத்து அதற்கான பணத்துடன் ஒரு அதிர்ஷ்டலாபச் சீட்டையும் பெற்றுக்கொள்ளுங்கள்.

**TASTE LINE INDUSTRIES**
(pvt) LTD,
14, Seenier Lane, JAFFNA.

(சி-3394)


## முக்கிய அறிவித்தல்

துண்டி இந்து மயான பரிபாலன சபையின் (கொழும்புத்துறை) புதிய ஒழுங்குவிதிமுறைகள் பின்வருமாறு:

மேற் குறிப்பிட்ட பரிபாலனசபையைத் தவிர இம் மயானத்திற்கான அபிவிருத்திச் செயற் திட்டங்களுக்காக எந்த ஒரு தனிநபரும் பணம் சேகரிக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்றும் 11-02-94 வெள்ளிக்கிழமையில் இருந்து மயானத்திற்குள் பிரேதத் தகனத்திற்குக் கொண்டு செல்பவர்கள் குறைந்தது மூன்று மணித்தியாலத்திற்கு முன்னதாக சபையின் பொருளாளரிடம் அனுமதியைப் பெற்று மயானத்தில் உள்ள காவலாளியிடம் கொடுக்க வேண்டுமெனவும் சபையினரால் முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்பதைப் பொது மக்களின் முக்கிய கவனத்திற்கு சபையின் சார்பாக பணிவன்புடன் அறியத் தருகின்றோம்.

நன்றி வணக்கம்

ம. சுந்தரலிங்கம் — கௌரவ தலைவர்
க. கிருஸ்ணகுமார் — கௌரவ பொருளாளர்
செ. கந்தசாமி — கௌரவ செயலாளர்

09-02-1994 துண்டி, கொழும்புத்துறை.
(சி-8576))

## கலந்துரையாடல்

யாழ். மாவட்ட கரபந்தாட்ட சங்க நிர்வாகிகளுடனான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 12ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு கோண்டாவில் அரசியல்துறை யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது. இதில் யாழ். மாவட்ட கரபந்தாட்டச் சங்க நிர்வாகசபை உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக்குழு கேட்டுக்கொள்கின்றது.

## விவேகானந்தர் நூற்றாண்டு விழா

சுவாமி விவேகானந்தர் சிக்காக்கோ நூற்றாண்டு விழா எதிர்வரும் 12-ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்வுக்கு யாழ் மாநகராட்சி மன்ற ஆணையாளர் வே.பொ. பாலசிங்கம் தலைமைதாங்கவுள்ளார்.

திருமதி நாச்சியார் செல்வ விநாயகத்தின் சிறப்பு சொற்பொழிவுடன் மலர் வெளியீடு, பரிசு வழங்கல் என்பவற்றுடன் கலை நிகழ்ச்சியும் இடம் பெறவுள்ளன.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 09.02.1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 660

வடபகுதிக்கு உள்ளேவந்த வாகன இலக்கங்கள்:

26-3682, 24-5241, 24-2680, 24-8429, 42-3267, 26-3495, 24-9758, 24-9037, 28-0854, 41-9530, 26-1321, 24-4636, 24-4908, 27-9404, 24-6489, 24-2944, 24-0415, 40-7584.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

40-2828, 41-1960, 26-7307, 26-852, 24-4476, 24-1917, 41-5605, 26-3545, 41-9038, 27-5535.

## 31-ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 22 - 2 - 20

மறைவு: 11 - 1 - 94

### இளையதம்பி வள்ளிப்பிள்ளை

அந்தியேட்டி: 10 - 02 - 1994

எங்கள் நினைவில் நிலைத்திருக்கும் உங்கள் முகம் என்றென்றும் எங்கள் உள்ளங்களில் பதிந்திருக்கும் உங்கள் நினைவே எங்கள் இதயங்களை நிறைத்தி

## புதிய தேர்

கரவெட்டி கிழக்கு கிழவி தோட்ட விக்ன விநாயகரின் புதிதாக நிர்ணயிக்கும் சித்திரத் தேரின் அச்சுக்கோர்க்கும் வைபவம் நாளை யோ. கேதீஸ்வரசர்மா தலைமையில் ஆரம்பமாகும். (யோ)

## இல்ல விளையாட்டு

(வடமராட்சி)

இமையாணன் அ.த.க. பாடசாலை வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி எதிர்வரும் 12ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு பாடசாலை அதிபர் திரு. குட்டித்தம்பி தலைமையில் நடைபெறும். (யோ)

## எறிகணை

நடத்தப்பட்டன:

எறிகணைகள் யாழ். கோட்டை, கொட்டடி, நாவாந்துறை பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன. (21)

## கடற்படை

வந்த கடற்படையினரின் வேகப் படகுகள், மீனவர்களை நோக்கி சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபட்டது.

இத் தாக்குதல் சம்பவத்தில் காயமடைந்தவர், சக மீனவர்களின் துணையுடன் கரைக்கு கொண்டு வரப்பட்டார்.

அவசர சிகிச்சைக்காக இம் மீனவர் யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## வெற்றிடம்

லேயே மேலும் தாமதங்கள் ஏற்பட்டுள்ளது.'

இவற்றை நிரப்புவதற்கு ஏனைய பல்கலைக் கழகங்களில் ஏற்பட்டுள்ள வெற்றிடங்கள் தமக்குக் கிடைக்கும் பட்சத்திலேயே யாழ். பல்கலைக்கழகம் உட்பட அனைத்து பல்கலைக் கழகங்களிலும் ஏற்பட்டுள்ள வெற்றிடங்கள் மீள நிரப்பப்படும் என அவ் அதிகாரிகள் தெரிவித்தனராம்.

## வீரச்சாவு

ப்டினன்ட் ஜெயசீலன் (இராமலிங்கம் வித்யராஜா, இல. 45, விக்கிரம் வீதி, றெட்பானா விசுவமடு கிளிநொச்சி) என்னும் போராளிக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

## வடக்கு

விமானத் தாக்குதல்களும் தொடர்கின்றன.

வடக்கு கிழக்கு பகுதிகளில் தமிழ் மக்கள் 2,500 ஆண்டு

## 10-ம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்: 9 – 3 – 1917



அரன் அடியில்: 1 – 2 – 1984

### திருமதி அசுபதி சின்னத்தம்பி

பளை, தெல்லிப்பழை

திதி:- 10-2-1994

ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட சிவநெறி வழுவா எங்கள் அன்னையே ஆண்டுகள் பத்து சென்றாலும் உங்கள் நினைவு எங்கள் நெஞ்சத்திலே அணையா ஒளித்தீபமாக ஒளிவீசும். உங்கள் ஆத்மா சாந்தியடைய எங்கள் குல தெய்வமாகிய அன்னை பராசக்தியைப் பிரார்த்திக்கும்,

கோயில் வீதி, மல்லாகம். (7479) — கணவன், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## மரண அறிவித்தல்கள்



### செல்வி பியூலாஎப்சிபா

குருநகரைச் சேர்ந்த சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவி செல்வி பியூலா எப்சிபா ஞாயிற்றுக்கிழமை (6-2-94) கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

இவர் செபஸ்ரியன் சூசைப்பிள்ளை (யோசை)

செ. கந்தசாமி
கௌரவ செயலாளர்

09-02-1994 துண்டி, கொழும்புத்து ஏற:
(சி-8576))




## வெளி வந்துள்ளது!

# கடற்புலிகள்

(தொகுப்பு நூல்)

விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் அமைப்பின் தோற்றம், வளர்ச்சி பற்றிய கட்டுரைகளும், கடற்புலி வீரர்கள் சிலரின் நினைவுக் கட்டுரைகளும் இதில் தொகுக்கப்பட்டுள்ளன.

'விடுதலைப்புலிகளின் கடற்புலிகள்' பற்றிய சிறந்த ஒரு ஆவணமாக இந் நூல் உள்ளது;

**அனைத்து இடங்களிலும் விற்பனைக்கு வந்துவிட்டது!**

**கடற் புலிகள்**

(சி-8564) விலை **60/-**


## இளையதம்பி வள்ளிப்பிள்ளை

**அந்தியேட்டி: 10 - 02 - 1994**

எங்கள் நினைவில் நிலைத்திருக்கும் உங்கள் முகம் என்றென்றும் எங்கள் உள்ளங்களில் பதிந்திருக்கும் உங்கள் நினைவே எங்கள் இதயங்களை நிறைத்திருக்கும்.

உங்கள் பிரிவு தாங்காது துயருறும்;

மக்கள், மருமக்கள்,
புலோப்பளை, பேரப்பிள்ளைகள்,
பளை. பூட்டப்பிள்ளைகள்.

(7480)

## 92-ம் நாள் நினைவஞ்சலி



### 2-ம் லெப்டினனட் வண்ணம்
(சிவனருள் சிவகுமார்)

பிறப்பு: 14-3-1973 வீரச்சாவு: 11-11-1993

வண்ணம் அவன் எண்ணமதில்
தமிழன்னை குடி கொண்டாள்!!
அன்னை அவள் விலங் கொடிக்க
வீறு கொண்டு எழுந்து நின்றான்!!
பூநகரி மீது பாய்ந்து
புகழ் பரப்பி வெற்றி கண்டான்!!!

உன் ஆத்மா சாந்தியடைவதாக.

கற்கோவளம், நின் பிரிவால் துயருறும்,
பருத்தித்துறை, குடும்பத்தினர்
10-02-1994 (7475)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 81-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1994 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது;


நாச்சி) என்னும் போராளிக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

### வடக்கு
விமானத் தாக்குதல்களும் தொடர்கின்றன.

வடக்கு கிழக்கு பகுதிகளில் தமிழ் மக்கள் 2,500 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பாரம்பரியமாக வாழ்ந்து வருகின்றனர். பிரித்தானியர் வருவதற்கு முன்னர் தமிழர்களுக்கு வடக்கு கிழக்கில் தனி ராஜ்யம் இருந்தது என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஐ தே க
செலுத்தப்படுவதாகவும் இவர்கள் தேர்தல் நடவடிக்கைகளுக்கு பாதகமான செயல்களில் ஈடுபடுவார்களாயின் இவர்கள் கைது செய்யப்படுவார்கள் எனவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

### கொழும்பு
ஐக்கிய தேசியக் கட்சி நிராகரித்தது என ராவய பத்திரிகையில் வந்த செய்தியை முற்றாக மறுத்த அவர் அம்பாந்தோட்டை அல்லது வேறு எந்தத் தொகுதிக்கும் சஜித் விண்ணப்பிக்கவில்லை என அவர் தெரிவித்தார்.

### வடக்கிற்கு
டி. பி. விஜேதுங்கா தெரிவித்துள்ளார்.

கம்பளை, உடுநுவர பகுதிகளில் கூட்டங்களில் பேசுகையிலேயே ஜனாதிபதி விஜேதுங்கா இவ்வாறு தெரிவித்தார் புலிகள் ஈழம் கோரும்போது தோட்டப்பகுதி தமிழர்கள் தோட்டப்பகுதியை கோரலாம். இந்தக் கோரிக்கைகளை நாம் ஏற்க வேண்டுமா? நிச்சயமாக ஏற்க முடியாது.

இந்த நாட்டிலுள்ளபெரும்பான்மையினர் சிங்களவர்கள் எனவே சிங்களவர்கள்தான் நாட்டை ஆள வேண்டும் அவர்கள் கடந்த காலத்திலும் நாட்டை ஆண்டனர். எதிர்காலத்திலும் நாட்டை ஆள்வர். சிறுபான்மையினர் அவர்களுக்கு உதவி வழங்க வேண்டும் எனவும் ஜனாதிபதிவிஜேதுங்கா தனதுரையில் குறிப்பிட்டார்.

## செல்வி பியூலாஎப்சிபா

குருநகரைச் சேர்ந்த சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவி செல்வி பியூலா எப்சிபா ஞாயிற்றுக்கிழமை (6-2-94) கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

இவர் செபஸ்ரியன் சூசைப்பிள்ளை (யோசை) மரியா தம்பதிகளின் அன்பு மகளும், சுமதி, லூயா, நிதிலா, ரமா, ஸ்ரீபன், ஸ்ரெனோ, ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார். அன்னாரின் பூதவுடல் அடக்க ஆராதனைக்காக வியாழக்கிழமை இன்று (10-2-94) காலை 9.00 மணியளவில் இல. 101 பிரதான வீதியிலுள்ள அன்னாரது இல்லத்தில் இருந்து வசந்த புரத்திலுள்ள இலங்கை பெந்தகோஸ்தே சபை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், விசுவாசிகள், கல்லூரி மாணவிகள் ஏற்றுக்கொள்ளும்படி அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:

செபஸ்ரியன் சூசைப்பிள்ளை

101 பிரதான வீதி, (யோசை)
யாழ்ப்பாணம். (7477)

## கார்த்திகேசு பூரணம்
(திருநெல்வேலி கிழக்கு)

கார்த்திகேசு பூரணம் காலமாகிவிட்டார்; இவர் சுப்பிரமணியம் கார்த்திகேசுவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் (உரிமையாளர் சுப்பிரமணியம் மெடிக்கல் ஸ்ரோர்ஸ், கல்வியங்காடு), இந்திராணி, கணேசலிங்கம் (உரிமையாளர் கணேஷ் ரெக்ஸ் கல்வியங்காடு) ஆகியோரின் அன்புத் தாயாரும் விசயலெட்சுமி, திருநாவுக்கரசு (ஆசிரியர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி), விக்கினேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும் சந்திரவதனி (அவுஸ்திரேலியா), சந்திரமோகன், முகுந்தன், பாஸ்கரன், தயாளினி, சயந்தன் (யாழ் மருத்துவபீட மாணவன் 1ஆம்வருடம்), சுகந்தி, தர்சினி, நிருபா, சுஜித்தா, நிலானி, கஜானி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 10-2-94 வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக செம்மணிமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

பூதவராயர் வீதி, தகவல்:
திருநெல்வேலி கிழக்கு, கா. கணேசலிங்கம்
யாழ்ப்பாணம்.

(7483)